16.10.2025

CC No. 103/2022

ம.சா. 2 கணேசன் த/பெ. கருப்பையா, காரைக்குடி.

குறுக்கு விசாரணை

1) புகார்தாரரை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 20 வருடங்களாக தெரியும். எதிரியை 4 வருடங்களாக தெரியும். எதிரியை முதன் முதலாக எதிரியின் அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். எதிரியின் அலுவலகம் புதிய பேரூந்து நிலையத்திற்கு முன்பு உள்ளது. புகார்தாரரின் தந்தை எதிரியிடம் இடம் வாங்குவது சம்பந்தமாக வாங்கிய தொகையை புகார்தாரருக்காக எதிரியிடம் கேட்க சென்றபோது பார்த்தேன். புகார்தாரரின் தந்தையிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் நேரடியாக நான் பார்க்கவில்லை. புகார்தாரரின் திருமணம் எங்கு வைத்து நடந்தது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு புகார்தாரரின் மனைவி மற்றும் பெயர் விபரங்கள் தெரியாது. புகார்தாரரும் அவரது தகப்பனாரும் பேச்சு வார்த்தை இல்லை என்ற விபரம் தெரியுமா என்றால் அவர்கள் பேச்சு வார்த்தையில் இருந்தார்கள். புகார்தாரரின் அப்பா கொரோனா காலத்தில் கொரோனா தொற்றால் இறந்தார் என்றால் சரிதான். பின்னர் சாட்சி புகார்தாரரின் அப்பா மன உலைச்சலில் இறந்தார் என்று கூறுகின்றார்.

2) புகார்தாரர் காதல் திருமணம் செய்து கொண்டதால் புகார்தாரரின் தகப்பனார் இறக்கும் காலம் வரை இருவரும் பேச்சு வார்த்தையில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் புகார்தாரரின் தகப்பனாருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது அவர் சொல்ல கேள்விபட்டேன். நானும் புகார்தாரரும் சேர்ந்து எதிரியிடம் வேறு ஒரு இடம் விற்பது சம்பந்தமாக எதிரியை அனுகினோம் என்றால் இல்லை. நானும், புகார்தாரரும், கீரணிபட்டியில் உள்ள இடத்திற்காக எதிரியிடம் ரூ. 10 ஆயிரம் முன்பணம் பெற்றோம் என்றும், பாக்கி கிரைய தொகைக்காக இந்த வழக்கு காசோலையை பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. அந்த காசோலைகளை வைத்து எதிரியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கில்

**இவ்வழக்கு காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார்தாரரின் தந்தைக்கும் எதிரிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் புகார்தாரர் தாக்கல் செய்ய தயாராக உள்ளாரா என்றால் அந்த ஒப்பந்ததிற்கான பகுதி தொகை ரூ.5 லட்சத்தை மட்டும் கொடுத்துவிட்டு வழக்கு காசோலைகளை புகார்தாரரிடம் எதிரி கொடுத்து ஒப்பந்தத்தை எதிரி திரும்ப பெற்றுக்கொண்டுவிட்டார். மேற்படி ஒப்பந்தத்தை தாக்கல் செய்தால் எதிரி புகார்தாரரின் தகப்பனாரிடம் தொகையை செலுத்தி வரவு வைத்த விபரம் தெரிந்து விடும் என்பதால் மேற்படி ஒப்பந்தத்தை தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரும் அவரது தகப்பனாரும் புகார்தாரரின் அப்பா இறக்கும் காலம் வரை பேச்சு வார்த்தையில் இல்லை என்றும், அவர் இறந்த பின்னர் அந்த ஒப்பந்தத்தை வைத்து வழக்கு காசோலையை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் புகார்தாரரும் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.16 15:14:21 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)